So copy

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – விடுதிகள் - ஆதிதிராவிடர், பழங்குடியினர் விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கான உணவுத்தொகை 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந:4)துறை**

அரசாணை(நிலை) எண்.130

நாள்.22.12.2020
சார்வரி, மார்கழி மாதம் 7–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டது.

1. அரசாணை(நிலை) எண். 44, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 05.06.2017.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண். த1/7813/2020, நாள் 19.04.2020.
3. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். பமே/ஈ1/2714/2020, நாள் 07.05.2020.

------

ஆணை:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2020–2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத்தொடரில் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> **"ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும், உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கான உணவுத்தொகை 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்"**

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ.755/– லிருந்து ரூ.900/– ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவி

ஒருவருக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.875/—லிருந்து, ரூ.1000/— ஆகவும் உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது.

3. மேற்காணும் அறிவிப்பை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல ஆணையர் உணவு கட்டணம் உயர்த்தப்பட்டு 3 வருடங்களாவதாலும் மளிகை மற்றும் இதர பொருட்களின் விலை உயர்வின் காரணமாக மாணாக்கர்களின் உணவுக் கட்டணம் உயர்த்தப்பட வேண்டியது அவசியமானதாகும் என்பதால், ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதி மாணாக்கர்களுக்கும் உணவுத்தொகையினை உயர்த்தி வழங்கும் பொருட்டு ரூ.10,42,50,700/— நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர், பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 312 பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகள், 43 பழங்குடியினர் விடுதிகள் மற்றும் 5 தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப் பயிலும் 27420 மாணாக்கர்களுக்கு உணவுக் கட்டணத்தினை உயர்த்தி வழங்குவதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூ.2,75,26,700/— ஒதுக்கீடு செய்து செலவினம் மேற்கொள்ள அனுமதித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கான உணவுத்தொகையினை ரூ.900/—லிருந்து ரூ.1000/— ஆகவும் மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவுத்தொகையினை ரூ.1000/—லிருந்து ரூ.1100/— ஆகவும் உயர்த்தி 2020—2021ஆம் ஆண்டு (ஜனவரி முதல் மார்ச் வரை)வழங்கியும் அதற்கான செலவினம் ரூ.3,92,67,570/—ஐ (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து அறுபத்து ஏழாயிரத்து ஐந்நூற்று எழுபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5—இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| கணக்குத் தலைப்பு | தொகை |
|---|---|
| ஆதிதிராவிடர், பழங்குடியினர்ங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் — 01 ஆதிதிராவிடர் நலன் — 277 கல்வி — மாநிலச் செலவினங்கள் — AE- மாணவர் இல்லங்கள்—367—உணவளிக்கும் / உணவுச் செலவுகள்—09 ஏனையவை<br>IFHRMS (து.தொ.கு.2225 01 277 AE 36709)<br>பழைய (து.தொ.கு.2225 01 277 AE 6792) | ரூ.3,09,17,007/— |

| | |
|---|---|
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA-பள்ளிகள்–367– உணவளிக்கும்/உணவுச் செலவுகள்– 09 ஏனையவை<br>IFHRMS (த.தொ.கு . 2225 02 277 AA 36709)<br>பழைய (த.தொ.கு . 2225 02 277 AA 6799) | ரூ.72,51,797/– |
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள்–AF-பழங்குடியினர் மாணவர் இல்லங்களை பராமரித்தல்–367– உணவளிக்கும்/உணவுச் செலவுகள்– 09 ஏனையவை<br>IFHRMS (த.தொ.கு . 2225 02 277 AF 36709)<br>பழைய (த.தொ.கு . 2225 02 277 AF 6799) | ரூ.2,99,321/– |
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – AW- மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும், பராமரித்தலும்–367– உணவளிக்கும்/உணவுச் செலவுகள்–09 ஏனையவை<br>IFHRMS (த.தொ.கு . 2225 02 277 AW 36709 )<br>பழைய (த.தொ.கு . 2225 02 277 AW 6795 ) | ரூ.4,07,880/– |
| "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – JU–பழங்குடியினர் மாணாக்கர்களுக்காக அரசு மாணவர் இல்லங்களை ஏற்படுத்துதல் 367– உணவளிக்கும்/உணவுச் செலவுகள்– 09 ஏனையவை<br>IFHRMS (த.தொ.கு . 2225 02 277 JU 36709 )<br>பழைய (த.தொ.கு . 2225 02 277 JU 6790 ) | ரூ.3,91,565/– |

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் / பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2020–2021–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 5–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையர், ஆதிதிராவிடர் நலம் / இயக்குநர், பழங்குடியினர் நலம் ஆகியோருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 5–இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2020–2021–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்க குறிப்பினையும்

மற்றும் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (ஆ.தி.(ம)ப.ந/வ.செ.பொது–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், ஆதிதிராவிடர் நலம் / இயக்குநர், பழங்குடியினர் நலம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.46434 /நிதி(ஆதி(ம)பந)துறை/2020, நாள்18.12.2020–இல் பெற்று வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.1170 (ஆயிரத்து நூற்று எழுபது) பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்:–</u>
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–35/9/18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–600 009

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் தனிச்செயலர்,சென்னை–600 009.
நிதித்(ஆதி(ம)பந) வ.செ.பொ–I/வ.செ.பொ–II / வ.வ.I)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை,சென்னை– 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

*//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//*

கோ. தினகர் 22/12/2020.
பிரிவு அலுவலர்

## இணைப்பு –II

**அரசாணை (நிலை) எண். 130 , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை, நாள்.22.12.2020**

**கல்லூரி விடுதிகள்**

| வ. எண். | உணவுப் பொருளின் விவரம் | பொருளின் அளவு ஒரு மாணவனுக்கு ஒரு மாதத்திற்கு | ஒரு கிலோவிற்கான விலை ரூ. | ஒரு மாதத்திற்கான தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | அரிசி | 18 கிலோ | 1 | 18 |
| 2 | துவரம் பருப்பு | 750 கிராம் | 100 | 75 |
| 3 | கடலை பருப்பு | 200 கிராம் | 50 | 10 |
| 4 | உளுத்தம் பருப்பு | 300 கிராம் | 100 | 30 |
| 5 | பாசிப் பருப்பு | 500 கிராம் | 70 | 35 |
| 6 | எண்ணெய் | 500 கிராம் | 70 | 35 |
| 7 | புளி | 300 கிராம் | 100 | 25 |
| 8 | மிளகாய் | 150 கிராம் | 170 | 25 |
| 9 | தனியா | 50 கிராம் | 80 | 4 |
| 10 | மஞ்சள் பொடி | 20 கிராம் | 120 | 2 |
| 11 | உப்பு | 500 கிராம் | 8 | 4 |
| 12 | கறி மசாலா | 10 ரூபாய் | 10 | 10 |
| 13 | மிளகு | 20 கிராம் | 250 | 5 |
| 14 | சீரகம் | 20 கிராம் | 200 | 4 |
| 15 | கடுகு | 20 கிராம் | 50 | 1 |
| 16 | பூண்டு | 20 கிராம் | 100 | 2 |
| 17 | காய்கறி, கருவேப்பிலை, இஞ்சி, பச்சை மிளகாய், மற்றும் மல்லிக் கீரை | 6 கிலோ | 30 | 180 |
| 18 | தயிர்/பால் | 1.5 லிட்டர் | 30 | 45 |
| 19 | விறகு/எரிவாயு | 3.5 கிலோ | 60 | 210 |
| 20 | ஆட்டிறைச்சி | 160 கிராம் | 600 | 96 |
| 21 | கோழி இறைச்சி | 240 கிராம் | 180 | 43 |
| 22 | முட்டை | 20 எண்ணிக்கை | 5 | 100 |
| 23 | வெங்காயம் | 500 கிராம் | 20 | 10 |
| 24 | தக்காளி | 500 கிராம் | 20 | 10 |
| 25 | எலுமிச்சை | 5 எண்ணிக்கை | 2 | 10 |
| 26 | தேங்காய் | 1 எண்ணிக்கை | 10 | 10 |
| 27 | பெருங்காயம்/ஆப்ப சோடா | 20 கிராம் | 48 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | ரவா | 300 கிராம் | 38 | 10 |
| 29 | டால்டா | 50 கிராம் | 70 | 3 |
| 30 | வெந்தயம் | 20 கிராம் | 60 | 1 |
| 31 | சோம்பு | 20 கிராம் | 65 | 1 |
| 33 | வறுத்த பருப்பு | 350 கிராம் | 70 | 24 |
| 34 | பட்டாணி | 50 கிராம் | 40 | 2 |
| 35 | சுண்டல் | 500 கிராம் | 48 | 24 |
| 36 | சுக்குமல்லி/கருப்புக்கட்டி/ தேநீர் | 500 கிராம் | 70 | 35 |
| | கூடுதல் | | | **1100** |

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

22/12/2020.
பிரிவு அலுவலர்.

## இணைப்பு –I

### அரசாணை (நிலை) எண். 130 , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை, நாள்.22.12.2020

### பள்ளி விடுதிகள்

| வ. எண். | உணவுப் பொருளின் விவரம் | பொருளின் அளவு ஒரு மாணவனுக்கு ஒரு மாதத்திற்கு | ஒரு கிலோவிற்கான விலை ரூ. | ஒரு மாதத்திற்கான தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | அரிசி | 15 கிலோ | 1 | 15 |
| 2 | துவரம் பருப்பு | 650 கிராம் | 100 | 65 |
| 3 | கடலை பருப்பு | 200 கிராம் | 50 | 10 |
| 4 | உளுத்தம் பருப்பு | 250 கிராம் | 100 | 25 |
| 5 | பாசிப் பருப்பு | 400 கிராம் | 70 | 28 |
| 6 | எண்ணெய் | 350 கிராம் | 70 | 25 |
| 7 | புளி | 250 கிராம் | 100 | 25 |
| 8 | மிளகாய் | 150 கிராம் | 170 | 25 |
| 9 | தனியா | 50 கிராம் | 80 | 4 |
| 10 | மஞ்சள் பொடி | 15 கிராம் | 120 | 2 |
| 11 | உப்பு | 500 கிராம் | 8 | 4 |
| 12 | கறி மசாலா | 10 ரூபாய் | 10 | 10 |
| 13 | மிளகு | 20 கிராம் | 250 | 5 |
| 14 | சீரகம் | 20 கிராம் | 200 | 4 |
| 15 | கடுகு | 20 கிராம் | 50 | 1 |
| 16 | பூண்டு | 20 கிராம் | 100 | 2 |
| 17 | காய்கறி, கருவேப்பிலை, இஞ்சி, பச்சை மிளகாய், மற்றும் மல்லிக் கீரை | 5 கிலோ | 30 | 150 |
| 18 | தயிர்/பால் | 1.5 லிட்டர் | 30 | 45 |
| 19 | விறகு/எரிவாயு | 3 கிலோ | 60 | 180 |
| 20 | ஆட்டிறைச்சி | 160 கிராம் | 600 | 96 |
| 21 | கோழி இறைச்சி | 200 கிராம் | 180 | 36 |
| 22 | முட்டை | 20 எண்ணிக்கை | 5 | 100 |
| 23 | வெங்காயம் | 500 கிராம் | 20 | 10 |
| 24 | தக்காளி | 500 கிராம் | 20 | 10 |
| 25 | எலுமிச்சை | 5 எண்ணிக்கை | 2 | 10 |
| 26 | தேங்காய் | 1 எண்ணிக்கை | 10 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | பெருங்காயம்/ஆப்பசோடா | 20 கிராம் | 48 | 1 |
| 28 | ரவா | 250 கிராம் | 38 | 10 |
| 29 | டால்டா | 50 கிராம் | 70 | 4 |
| 30 | வெந்தயம் | 20 கிராம் | 60 | 1 |
| 31 | சோம்பு | 20 கிராம் | 65 | 1 |
| 32 | வறுத்த பருப்பு | 350 கிராம் | 70 | 25 |
| 33 | பட்டாணி | 50 கிராம் | 40 | 2 |
| 34 | சுண்டல் | 500 கிராம் | 48 | 24 |
| 35 | சுக்குமல்லி/கருப்புக் கட்டி/தேநீர் | 500 கிராம் | 70 | 35 |
| | கூடுதல் | | | 1000 |

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

22/12/2020.
பிரிவு அலுவலர்.